மனமிசைந்து ஏவீ
மங்கையர் நாடும் ஒரே
✶ புடைவை ஸ்தாபனம் ✶
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 4
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வாடிக்கையாளர் பரிசுத்திட்டம்
1ஆம் பரிசு - தங்கப்பதக்கம்
2ஆம் பரிசு - ரூ. 5000
3ஆம் பரிசு - ரூ. 2500
சிட்டையைச் சேகரியுங்கள்
அதிர்ஷ்டம்: 15 - 04 - 94
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 05 திங்கட்கிழமை 20 - 12 - 1993 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 24

# அரசுக்கு துணைபோகும் தேசத்துரோகிகள் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## மண்டைதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச. 20

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு யாழ். கரையோரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

படையினர் ஏவிய ஷெல் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலாகவும் சென்றது. (இ-15)

## கிளாலி படகுச் சேவை மழை காரணமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச. 20

கிளாலி — பூநகரி படகுச் சேவை மழை காரணமாக மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## தமிழ்நாட்டு கரையை சூறாவளி கடக்கலாம்

சென்னை, டிச. 20

வங்கக் கடலில் உருவாகியுள்ள சூறாவளி நேற்று நள்ளிரவு அளவில் அதிராம்பட்டினத்துக்கும் பாண்டிச்சேரிக்கும் இடையே தமிழ் நாட்டுக் கரையைக் கடக்க இருந்ததாக எதிர்பார்க்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நாகபட்டினத்துக்கு தென் கிழக்கே 250 கிலோ மீற்றர் தொலைவில் தாழமுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் விளைவாக தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் கரையோரப் பகுதிகளிலும் கடும் மழை பெய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## சூறாவளி அபாயம் கிழக்கில் நீங்கியது

கொழும்பு, டிச. 20

கிழக்கு மாகாணத்தை சூறாவளி தாக்கக் கூடிய அபாயம் நீங்கியுள்ளது என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வங்காளவிரிகுடாவில் உருவான தாழமுக்கம் நேற்று பிற்பகல் 4 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து சுமார் 200

(4ம் பக்கம் பார்க்க)

## காட்டிக் கொடுத்த 9 பேருக்கு மரண தண்டனை விதிப்பு

### விடுதலைப் புலிகள் பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசம்பர் 20

ஸ்ரீலங்கா அரசாங்கம் அரசியலில் பல நெருக்கடிகளை எதிர் நோக்குவதனால், தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, தனது நாசகாரக் கைக் கூலிகளின் செயல்களை முடுக்கி விட்டுள்ளது.

ஆகையால் அரசுக்குத் துணை போகும் தேசத்துரோகிகள் குறித்து மக்கள் அவதானத்துடனும், விழிப்புடனும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசத்தையும் மக்களையும் காட்டிக் கொடுத்துக் குற்றம் இழைத்த ஒன்பது பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டார்.

திரு பொற்கோ நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்போதே மேற்கண்டவற்றைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:-

''ஸ்ரீலங்கா அரசு தான் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளில் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்திக்கும் அதே வேளையில், அரசியல் சூழலில் பல நெருக்கடிகளை எதிர் நோக்குவதனால் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனது நாசகாரக் கைக் கூலிகளின் செயல்களை முடுக்கி விட்டுள்ளது.

இவ்வேளையில் மக்கள் அனைவரும் மிக அவதானத்துடன், விழிப்புணர்வுடன் செயற்பட்டு எம்மக்களையும், தேசத்தையும் காப்பாற்றுவதற்கு எதிரியின் திட்டமிட்ட நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும்.''

எமது மக்களின் தற்போதைய பொருளாதார நிலையை தனக்குச் சாதகமாக்கி அற்ப ஆசைகளைக் காட்டி எதிரி ஏமாற்ற முற்படுகின்றான்.

இவ்வாறான எதிரியின் ஏமாற்று வலைக்குள் வீழ்ந்து, எதிரிக்கு துணை போவதால் நாம் எம்மையே அழிப்பது மட்டுமல்லாமல் எமது வருங்கால சந்ததியையும் முற்றாக அழிக்க முற்படுகிறோம் என்பதை நினைவில் நிறுத்திக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு சுகததாச அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ. தே. கவின் வருடாந்த மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் கலந்து கொள்ளவில்லை.

மத்திய மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக எதிரணியினருடன் இணைந்து வாக்களிக்கப் போவதாக அமைச்சர் தொண்டமான் அளித்துள்ள வாக்குறுதியை மாற்றிக் கொள்ளமாட்டார் என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ-5-6)

## வெள்ள அகதிகளுக்கு ஒருவார கால நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச. 20

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு ஒரு வார உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

தத்தமது பகுதிகளில் இடம்பெயர்ந்த குடும்பங்களை இனங்கண்டு உலர் உணவு நிவாரணம் வழங்கும் பொறுப்பை உதவி அரச அதிபர்கள் ஏற்றுக் கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை விவரங்கள் முழுமையாக இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளதாக உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-5-9)


## இவர்கள் தேசத்துரோகிகள்


விஜயரத்ன ஜெயரத்ன


பழனி தங்கவேல்


கந்தசாமி கலைச்சந்திரன்


செல்லர் செந்திராஜன்


முருகுப்பிள்ளை சத்தியராஜா


வல்லிபுரம் சந்திரசேகரம்


மரியதாஸ் தேவதாஸ்


யோகராசா சண்முகநாதன்


சாமிவேல் ஆறுமுகம்

## குடாநாட்டு வெள்ள நிலைமை மேலும் மோசமடைந்தது

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நண்பகலுக்குப் பின்னர் சிறிது ஓய்ந்திருந்த மழை நேற்று ஞாயிறு நண்பகல் தொடக்கம் மீண்டும் பெய்யத் தொடங்கியது. நேற்றிரவு இச் செய்தி எழுதப்படும் வரை மழை விட்டு விட்டுப் பெய்தது. மழையுடன் கூடவே சுமாரான வேகத்தில் காற்றும் வீசியது.

வெள்ளி — சனிக்கிழமைகளில் பெய்த மழையினால் வெள்ளப் பெருக்கு உண்டான இடங்களில் நேற்றுக் காலை நீர் மட்டம் ஓரளவு குறைந்திருக்க காணப்பட்டது. எனினும் நண்பகலில் மீண்டும் மழை பெய்ததால் வெள்ள நிலை மோசமடைந்தது.

நேற்றுக் காலை முதல் வானம் மப்பும் மந்தாரமுமாகவே காணப்பட்டது. நண்பகலுக்குப் பின்னர் காற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன படையினரின் உறவினரால் அரசுக்கு நெருக்கடி

### பூநகரி தாக்குதல் குறித்து பி. பி. ஸி.

பூநகரி தாக்குதலின் போது காணாமற் போன படையினரின் உறவினர்களால் ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் நெருக்குதல் ஏற்படப்போகிறது' எந்த விலை கொடுத்தாவது தமது உடன்பிறப்புக்களை ஒப்படைக்குமாறு அரசை அவர்கள் கேட்கப்போகிறார்கள்.

பி.பி.ஸி நேற்று மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டது.

உறவினர்களின் நெருக்குதல்களை ஸ்ரீலங்கா அரசு எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்றும் பி.பி.ஸி தெரிவித்தது.

பூநகரி தாக்குதலின் போது கொல்லப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



ஐ. தே. க வுடனான உறவு இனி இப்படித்தான் இருக்கும் என்று 'சிக்னல்' காட்டி விட்டார் போல......!

## புலிகளுக்கு எதிராகப் போராட புதிய படை உருவாக்க வேண்டும்

### முன்னாள் தளபதிகள் ஜனாதிபதிக்கு ஆலோசனை

கொழும்பு, டிச. 20

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிடக்கூடிய புதிய படை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.''

இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றின் முன்னாள் தளபதிகள் அடங்கிய குழு ஒன்று மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இக்குழு ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ள ஆலோசனைகள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளை விஸ்திரப்படுத்தவேண்டும்.

★ தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிக்கவேண்டும்.

★ பூநகரி மோதலின் பின்னடைவைச் சந்ித்துள்ள இராணுவம் புலிகளுக்கு எதிராக போரிட்டே ஆகவேண்டும்.

பாதுகாப்புத்துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டது. (இ-எ-3)

## சவக்காலை சந்தியில் மரண தண்டனை

யாழ்ப்பாணம், டிச. 20

தேசத்துரோகக் குற்றத்துக்காக நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒன்பது பேரில் ஒருவரான விஜயரத்ன ஜெயரத்ன என்பவருக்கு நேற்று யாழ்ப்பாணம் குருநகர் சவக்காலைச் சந்தியில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (இ-15)

## பேச்சு நடத்த தெற்கில் சரியான தலைமை இல்லை

### காமினி திஸநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, டிச. 20

வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்கு தற்போது தென்பகுதியில் சிங்கள தலைமைத்துவம் ஒன்று இல்லை. நாட்டில் இனப்பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் உறுதிபடக் கூறிவருவதன் மூலம் பிரச்சினை மேலும் சிக்கலடையப் போகிறது.

—ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. [illegible] யில் எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அரசு கடைப் பிடிக்கும் குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் கொள்கையினால் வடக்கு கிழக்கு யுத்தம் மலைபகத்தி[illegible] பொருளாதாரம் முழுமையா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்குண்டு

நல்ல இன கூட்டு வளர்ப்புடைய கறுப்பு, பிறவுன் பேட்டுக் கோழிகள் 3½ மாதம், 3½ மாதம் சேவல்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு ஒறிகாந்தா (சாரதி) 9, மாவீரர் வீதி, வல்வெட்டி. (28505)

## மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6810)

## கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா - லோமன் ஐந்து நாட்கள் பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் ஓடர்களுக்கு புறொயிலர், வெள்ளை பேட்டுக்குஞ்சு, சேவல் கோல்டன் கோமட் பேட்டுக்குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28465)

## தேவை

பஞ்சுமிட்டாய், ஐஸ் பழ வகைகளை துவிச்சக்கர வண்டி, தள்ளுவண்டி மூலம் விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. வானவில் குளிர்பான நிலையம், ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம். (28454)

## வாழ்த்து மடலகள

அழகிய புதிய டிசைன்களில் நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவில். ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6862)

## MAKE UP CLASSES

Basic Make up and Modern Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Veethy Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28487)

## ICING CLASSES

Wilton Sugar Flowers, Fondant Icing Structures வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் 24-12-93க்கு முதல் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28486)

## இந்தியா ருடே

இலங்கை ஏஜன்டான P. S. சுந்தரம் அன் சன்ஸ் அவர்கள் தமிழீழத்தில் ஏஜன்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6696)

## கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர் சகல விதமான டயறி வகைகள், கிறிஸ்மஸ் கார்ட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6698)

## வகுப்பு

ஜேர்மன் வளாகங்களிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் படிக்க விரும்பும் மாணவர்கள் ஜேர்மன் மொழி (Deutsch) பயிலவும் விலாசங்கள் பெறவும் தொடர்பு கொள்க. S சொர்ணலிங்கம், 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் - காங்கேசன்துறை வீதி அருகில்) (28468)

## நவகைடன்ஸ்

யாழ்ப்பாணம்

**94 A/L**

கணித விஞ்ஞானம்

பகல் நேர வகுப்பு

செவ்வாய், வியாழன் காலை 10 - 00 மணி நடைபெறுகின்றன.

(சி 6115)

---

**MATHS CENTRE**
NELLIADY

**ஆண்டு-5**
புலமைப்பரிசில் வகுப்புக்கள்

ஆரம்பம்:
**21 - 12 - 1993**
செவ்வாய் 9-00 a.m.

- நிர்வாகி.

(சி-6739)

## பிக்குகள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, டிச 20

பூநகரித் தாக்குதலில் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டதற்கு பொறுப்பான இராணுவ அதிகாரிகளை சேவையில் இருந்து நீக்கும்படி ருகுணு பிக்குகள் அமைப்பு அரசைக் கேட்டுள்ளது. (த-எ)

## சீருடைத் துணி

நவாலி, டிச. 20

யாழ். செயலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான சீருடை துணிகள் கடந்த வாரம் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் செல்லையா சேனாதிராஜா

மலர்வு: **02 — 04 — 1924**
உதிர்வு: **20 — 11 — 1993**

கோபமே யறியாது குதூகலமாய் வாழ்ந்து - மக்கள்
தாபமே பெரிதென்று தான் வாழ்ந்தான் - பாபம்
ஒன்றுமே செய்யாது உத்தமனாய் வாழ்ந்துநிதம்
நன்றுபல செய்த நம்பி.

எல்லார்க்கும் திருமணத்தை இனிதாக நிறைவேற்றி
எல்லார்க்கும் வாழ்வளித்த எம் தந்தை - நல்லார்க்கும்
பொல்லார்க்கும் புனிதனாய் பூவுலகில் தோற்றி நின்ற
வல்லாண்மை மிக்க மகான்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (20 - 12 - 1993) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்கள், தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மன் கோவிலடி,
கோண்டாவில். [28504]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 15 — 07 — 1933
திர்வு: 30 — 12 — 1992

### அமரர் சுப்பிரமணியம் அமரசிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் - காட்டுக்கந்தோர், யாழ்ப்பாணம்)

திதி: **20 — 12 — 1993**

குலவிளக்காய் ஒளிசிந்தி குதூகலம் கொள்ள வைத்தீர்!
கண்ணியமாய் எமை வளர்த்து கல்வியில் சிறக்க வைத்தீர்
மேதினியில் எம்மேன்மை கண்டு முழுமதியாய் -
முகம் மலர்ந்தீர்!
ஈசன் கழல் நீர் இணைந்து ஆண்டொன்று சென்றிடினும்
இதமான உம்பணிகள் எம் நெஞ்சில் நிலைத்திடுமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமகள் பேரன்.

தெசவுசாலை வீதி
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

Church Lane,
Uduvil.

(சி-6011)

---

**THE ROTARY CLUB OF JAFFNA**

# ENGLISH ESSAY CONTEST

Rotary District 3220 Sri Lanka is Organizing a National Level English Essay Contest 1993.

- ★ **Theme:** Preventing Teen Drug Abuse: Challenges and Solutions
- ★ **Medium:** English
- ★ **Words:** 450 — 600 Words (Typed or Clearly Printed)
- ★ **Age Limit:** 12 — 16 years
- ★ **Closing date:** 28th December 1993.
- ★ Essays will be evaluated based on knowledge of the Subject, Logical development and clarity of ideas presented.

Selection will be done by a Committee appointed by the Rotary District Governor.

The best ten essays will be awarded prizes at the Rotary District Conference 1994.

Attach the following entry form with the Passport Size Photograph and the Essay and send it to:-

**ROTARY ESSAY CONTEST-1993**
**C/O UTHAYAN,**
NAVALAR ROAD, JAFFNA.

## ENTRY FORM—

Name of the Author:
School:
Class:
Age:

I Certify the above Particulars are Correct.

..........................
Principal
School Seal.

Date: ...... ............ ......

(C-6727)

## நன்றி

**11 — 12 — 1993** ஆம் திகதி எம்மால் தவறவிடப்பட்ட பெறுமதிவாய்ந்த பொருளை எம்மிடம் தகுந்த ஆதாரத்துடன் ஒப்படைத்த கனகரத்தினம் மகாவித்தியாலய பழைய மாணவன் ஆகிய அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த கனகசபை யோகலிங்கத்திற்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

தி. சு. தவக்குமார் சார்ந்த குடும்பம்
மல்லாகம்.

(28512)

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை

மானிப்பாய்

(மானிப்பாய் பட்டினம் மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம் பண்டத்தரிப்பு கிராமம்)

வரியிறுப்பாளருக்கு;

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 1994ஆம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்-1994

1994 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும் தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31 ஆம், ஏப்ரல் 30 ஆம், ஜூலை 31 ஆம், ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1 ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்,

2 ஆம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்,

3 ஆம் கந்தாய வரி செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும்,

4 ஆம் கந்தாய வரி டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தை செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1993 ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

க. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
16 - 12 - 1993

(சி-6735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# மனித உரிமை ஆணைக்குழு இந்தியாவில் அமைக்கப்படும்

புதுடில்லி, டிச 20

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மசோதா ஒன்று இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மனித உரிமைகள் பொறுப்பு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட விருக்கிறது.

மனித உரிமைகளை மீறுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த மசோதாவை சமர்ப்பித்து உரையாற்றிய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் உறுதியளித்தார். மனித உரிமைகள் பொறுப்பு ஆணைக்குழுக்கள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

நாட்டின் பல இடங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றவை ஒப்புக் கொண்ட அவர் பாதுகாப்பு படையினரில் 150பேர் இத்தகைய குற்றங்களைப் புரிந்ததற்காகத் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் வெளியிட்டார். (த-5)

## பாடசாலை உபகரணம்

வலிகாமம் தெற்கு டிச. 20

வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் உள்ள பிள்ளைகளில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்துவரை கல்வி பயிலும் சிறுவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

கட்டுரையில் உள்ள ஹென்றிடொனால் என்ற அகதிமுகாமில் வாழும் மக்களுக்கு மேற்படி நிறுவனத்தால் றபர்சீற் படுக்கை விரிப்புக்களும் வழங்கப்பட்டன. (த-152)

## அனுராவுக்கு டி. பி. பரிசு!

கொழும்பு, டிச. 20

உயர்கல்வி அமைச்சராகப் பதவியேற்ற அனுராபண்டாரநாயக்காவுக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேனா ஒன்றைப் பரிசளித்தார்.

கடந்த வெள்ளி ஜனாதிபதி முன்னிலையில் திரு. அனுரா பண்டாரநாயக்கா புதிய உயர்கல்வி அமைச்சராகப் பதவி ஏற்ற போது பேனா கூரிய வாளை விட வலிமையானது எனக் கூறி அவருக்கு பேனா ஒன்றை ஜனாதிபதி பரிசாக வழங்கினார். (த-5)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

பின்வரும் சேவைகளுக்கான தொண்டுப் பணியாளர்கள் தேவை.

### 1. துணை விடுதி மேற்பார்வையாளர்கள்

விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு மேற்பட்டவராகவும், குடும்பத் தொந்தரவுகள் அற்றவராகவும், சேவைமனப்பான்மையுடன் விடுதியில் தங்கியிருந்து தொண்டுப் பணி செய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

### 2. சங்கத் தேநீர்ச்சாலைக் காசாளர்

21 வயதுக்கு மேற்பட்டவராகவும், க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தவராகவும், நல்லொழுக்கம், அர்ப்பணிப்புணர்வு உடையவராகவும், ரூபா பத்தாயிரம் மீளப்பெறக் கூடிய வைப்புப் பணம் செலுத்தக் கூடியவராகவும் விண்ணப்பதாரர் அமைய வேண்டும்.

### 3. சமையலாளர் (பெண்கள்)

30 வயதுக்கு மேற்பட்டவராகவும், நாளொன்றுக்கு ஏறத்தாழ 200 பேருக்குச் சைவ உணவு தயாரித்துக் கொடுப்பதில் திறமையுடையவராகவும் விண்ணப்பதாரர் அமைதல் வேண்டும்.

ஊக்குவிப்பு ஊதியம் பேசித் தீர்க்கப்படும்

விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 31 - 12 - 1993க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

சோ. பத்மநாதன்,
செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [28511]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லப்பா வள்ளியம்மை

தோற்றம்: **28—05—1901**
மறைவு: **31—12—1992**

திதி: 20 — 12 — 1993

இல்லறத்தில் நல்லறமாய் ஈடில்லாப் பெருநிதியாய்
மங்களமாய் மனைவாழ்வு மாண்புடனே நிறைந்திருந்த
மன்னவன் போல் நாம் வாழ, மந்திரியாய் பணிபுரிந்து
பஞ்சமிலா அன்போடு, பாசங்கள் படைசூழ
பந்தல் எலப்படர்ந்திருந்த பண்புருவே
குலவிளக்கே, குணக்குன்றே, தாயே, தயவான
மாமியே, அம்மம்மாவே, அப்பம்மாவே
மனதாற வில்லையம்மா, மனங்குவிர வில்லையம்மா
நின் ஆத்மா சாந்திபெற இறையடியை -
இறைஞ்சுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

42/1, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். (28509)

உதயன்
192/7, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## வெள்ளமும் நிவாரணமும்

கடந்த இரு தினங்களாக இழக்கிலும், வன்னிப் பகுதியிலும், குடாநாட்டிலும் தொடர்ந்து பெய்து வரும் பெரும் மழையினால் தமிழ் மக்களில் அனேகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். உடைமைச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே ஸ்ரீலங்காப் படையினரின் ராணுவ நடவடிக்கைகளாலும் கண்மூடித்தனமான வான் தாக்குதல்களாலும் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்த தொடர் மழையும் வெள்ளமும் ஒரு சவால் என்று சொல்லலாம்.

அந்த அளவுக்கு இந்த மழை பெரும் அழிவுகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி இருப்பதாக ஆரம்ப மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன

குடாநாட்டில் வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் அவர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஸ்ரீலங்காப் படையினரின் வான் தாக்குதல்கள் காரணமாக குடாநாட்டில் பெரும்பாலான வீடுகள் சேதம் அடைந்த நிலையில் திருத்தப்படாமலே விடப்பட்டிருந்தன. கடந்த மூன்றரை வருடங்களாக இதே நிலையே இருந்து வருகிறது.

இவற்றுள் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் உரிமையாளர்களினால் கைவிடப்பட்டிருந்தபோதிலும், ராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த அகதிகள் வேறு வழி இன்றி சேதமுற்ற வீடுகளில் தங்கி இருந்தனர்.

ஆகவே தற்போதைய மழையும், வெள்ளமும் ஏற்கெனவே அகதிகள் ஆக்கப்பட்டோரையே மீண்டும் வருத்துகின்றன.

கடந்த பல வருடங்களின் பின்னர் டிசம்பர் மாதம் ஒரே நாளில் பெய்துள்ள கூடிய மழையாக தற்போதைய மழை பற்றிய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மழை காரணமாக குடாநாட்டில் உள்ள குளங்கள் நிரம்பி வழிகின்றன. யாழ். நகரப் பகுதியில் சமீப காலத்தில் இல்லாதவாறு வடிகால்கள் நிறைந்து வழிகின்றன. சில இடங்களில் வெள்ளம் வீதிகளையும் மூடி நிற்கிறது.

அனேகமான கிணறுகள் நிரம்பி வழிவதால் அசுத்த நீர் கிணற்றுடன் கலக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில் —

★ இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் சமைத்த உணவு வகைகள் வழங்கப்பட வேண்டும்.

★ வெள்ள அகதிகள் தங்கி உள்ள இடங்களில் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக சுகாதார வசதிகள் பேணப்பட வேண்டும்.

★ கிணறுகள் மூலம் நோய்க்கிருமிகள் பரவுவதைத் தடுப்பதற்கு குளோறின் போன்ற தண்ணீர் சுத்திகரிப்பு மருந்துகள் கிணறுகளுக்கு இடப்பட வேண்டும்.

குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக பரவிவந்த வாந்தி—பேதி நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. எனினும் வெள்ளம் காரணமாக இந்த நோய் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து உருவாகி இருக்கிறது. ஆகவே உடனடியாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

இந்த வெள்ளம் பயிர்களுக்கும் பெரும் அழிவை ஏற்படுத்தி இருக்கிறது. தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் பெரும் செலவிலும், சிரமங்களின் மத்தியிலும் பயிர் செய்த விவசாயிகள் பெரிதும் பாதிப்புற்றுள்ளனர்.

வெள்ளம் காரணமாக வீதிகளும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. சரியான வடிகாலமைப்பு செய்யப்படாத காரணத்தால் பல இடங்களில் பொதுமக்களால் வீதிகள் வெட்டப்பட்டுள்ளன. ஏற்கனவே சேதமடைந்திருந்த வீதிகள் மேலும் சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறும் நிலை ஏற்பட்டிருக்கிறது;

ஆகவே இந்த வெள்ள அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமும், நஷ்டஈடும் வழங்கப்படவேண்டும்.

# தேசத்துரோக குற்றம் இழைத்து மரணதண்டனை விதிக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், டிச. 20

தேசத்துரோக குற்றச்சாட்டின்பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் செய்த குற்றங்களின் விவரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அக்குற்றச் சாட்டுகளின் விவரம் வருமாறு:

### விஜயரத்ன ஜெயரத்ன அல்லது சனா — வயது 23 (மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாவது கஜபாகு றெஜிமன்டில் செயற்பட்டவர். பின் அதிலிருந்து விலகி யாழ். வந்து யாழ்ப்பாண பெண் ஒருவரை திருமணம் செய்திருந்தார். அதன் பின் யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு ஊழியராக வேலையில் இணைந்து எமது இயக்க முகாம்கள் பற்றியும் இயக்க தளபதிகள் பற்றிய தகவல்களையும் சிறிலங்கா அரசுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் குண்டுத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு பெரும் எடுப்பிலான திட்டம் ஒன்றை தயார் செய்த சமயமே இவர் எம்மால் கைது செய்யப்பட்டார். இவரது தகவலின் அடிப்படையில் அதி உயர் சக்தி வாய்ந்த C4 ரக வெடிமருந்து கைப்பற்றப்பட்டது.

### பழனி தங்கவேல் அல்லது புலவர் அல்லது கண்ணாடி — வயது 36 (விஷ்ணு கோவில் வீதி, கண்டி வீதி, மாங்குளம்)

இவரால் எம்முகாம்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு அவை விமானத் தாக்குதலுக்கு உள்ளாகின.

வவுனியா சென்று வரும் மேலும் சிலரை தான் தொடர்பு வைத்திருந்த இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி அவர்களையும் காட்டிக் கொடுப்பவர்களாக மாற்றியுள்ளார். அத்துடன் 'புளொட்' சமூக விரோத கும்பலுடனும் இரகசிய தொடர்பு வைத்திருந்தார்.

### கந்தசாமி கலைச்சந்திரன் அல்லது சந்திரன் — வயது 28 (அராலி றோட், சங்கானை)

இவர் வவுனியா சென்று வரும்போது இராணுவ உளவாளிகளுடனும் புளொட் சமூக விரோத கும்பல்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி எமது இயக்கம் பற்றிய தகவல்களை வரைபடம் மூலம் வழங்கி வந்துள்ளார். இதற்காக தடை செய்யப்பட்ட பொருள்கள் கொண்டு வருவதற்கான அனுமதியையும் பெற்று பொருள்கள் கொண்டு வந்துள்ளார். முகாம்கள் பற்றிய விவரத்தையும், அதற்குரிய வரைபடங்களையும் எடுத்துச் செல்லும்போது கைது செய்யப்பட்டார். இவர் முன்னர் குறிப்பிட்ட பழனி தங்கவேல் (புலவர்) மூலமாகவே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி இருந்தார்.

### செல்லர் சௌந்திரராஜன் — வயது 24 (7, மந்துவில் கிழக்கு குடியிருப்புத் திட்டம் கொடிகாமம்)

இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கி நின்ற இளைஞர்களை புளொட் சமூக விரோத கும்பலுக்கு காட்டிக் கொடுத்து பணம் சம்பாதித்துள்ளார். இதில் பலரை கைது செய்து பணத்தை பெற்றதன் பின்பு விடுதலை செய்துள்ளனர். இதைவிட அங்கு தங்கிநின்ற இளைஞர்கள் மேலும் சிலரை புளொட் சமூக விரோத கும்பலின் வாகனத்தில் அவர்களுடன் நேரடியாகச் சென்று கைது செய்துள்ளார். புளொட் குழுவினருடன் கொழும்பில் இயங்கி வந்த இவர் மேலதிக தகவல்களை பெறும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்த வேளையில் கைது செய்யப்பட்டார்.

### முருகுப்பிள்ளை சத்தியராஜா அல்லது சத்தி — வயது 39 (அக்கராயன் குளம், கிளிநொச்சி)

இவர் எமது ஆதரவாளர் போல் தன்னை இனம் காட்டிக் கொண்டு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு வைத்து தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார். இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுடன் சேர்ந்து மது அருந்தி அந்த மது போதைக்காகவே எமது பல முகாம்களைக் காட்டிக் கொடுத்துள்ளார்.

### வல்லிபுரம் சந்திரசேகரம் அல்லது சந்திரன் — வயது 32 (17 ஆம் கட்டை, வல்லிபுனம், புதுக்குடியிருப்பு)

இவர் நான்கு முகாம்களைக் காட்டிக் கொடுத்துள்ளார் இதில் இரண்டு விமானத்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இராணுவ உளவுப் பிரிவுடன் தான் தொடர்பு வைத்தது மட்டும் அல்லாமல் வேறு சிலரையும் தொடர்புபடுத்தியுள்ளார். சுன்னாகம் பகுதியில் ஒரு முகாமையும் இயக்கச்சிப் பகுதியில் எமது நிலைகளையும் வெவ்வேறு நாட்களில் உலங்கு வானூர்தியில் சென்று நேரடியாகக் காட்டிக் கொடுத்துள்ளார்,

### மரியதாஸ் தேவதாஸ் — வயது 43 (பத்தினியம்மாள் குளம், வவுனியா)

இவர் வவுனியா சென்றுவந்த வேளையில் இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஜோசப் இராணுவ முகாம் சென்று எமதியக்கம் பற்றியும் இயக்க முகாம்கள் பற்றியும் தகவல்களை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார். எமது பிரதேசத்தை கைப்பற்றுவதற்கான இராணுவ நகர்வு நடவடிக்கைக்கா முன்கூட்டியே எமது நிலைகள் உள்ள பகுதிக்கு வந்து அவதானித்து எமது முன்னேற்பாடுகள் இல்லாத பகுதியினூடாக இராணுவத்தினர் நகர உறுதுணையாக இருந்துள்ளார்.

### தியாகராசா சண்முகநாதன் அல்லது கட்டையன், செல்வா, கண்ணாடி, கரடி — வயது 29 (ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி)

இவர் வவுனியா சென்றுவரும்போது இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். இதன் மூலம் தடைசெய்யப்பட்ட பொருள்களை சன்மானமாகப் பெற்று முகாம்களின் அமைவிடங்களை காட்டிக்கொடுத்ததுடன் இயக்க உறுப்பினர்களின் செயற்பாடுகளையும் அறிந்து எதிரிக்கு தெரியப்படுத்தி வந்துள்ளார்.

### சாமிவேல் ஆறுமுகம் அல்லது இரத்தினம் — வயது 34 (மடுக்குளம் — வேலங்குளம்)

இவர் வவுனியா சென்று வரும்போது புளொட் சமூக விரோதக்கும்பலுடனும், இராணுவத்துடனும் தொடர்பை ஏற்படுத்தி தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தார் வடபகுதியில் நிரந்தரமாக நிலை கொண்டிருந்த முக்கிய உளவாளிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்குமான தொடர்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

## கூட்டுறவு பரிசோதகர் பதவி; ஜனவரி இறுதியில் பரீட்சை

யாழ்ப்பாணம். டிச 20

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் அடுத்த மாத இறுதியில் நடத்தப் படவிருக்கிறது.

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகளுக்காக நடத்தப்படவிருந்த பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பியவர்களில் பலருக்கு அனுமதி அட்டைகள் கிடைக்காததால் யாழ்ப்பாணத்தில் அப்பரீட்சை குறிப்பிட்ட திகதியில் நடத்தப்படவில்லை.

இந்தப் பதவிகளுக்காக விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு அனுமதி அட்டைகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-3)

## தமிழ் நாட்டில் பதிவு செய்யாத ஈழத் தமிழர் தொடர்ந்து தடுப்புக் காவலில்

சென்னை, டிச 20

தமிழ்நாட்டுக்கு வந்ததற்கான முறையான பாஸ்போர்ட், அங்கு தங்குவதற்கான விஸா இல்லாதவர்கள் தங்களை காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு விடுத்த கோரிக்கையை ஏற்காத குற்றச்சாட்டின் பேரில் நாற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் தற்போது செங்கல்பட்டு, தஞ்சாவூர் மற்றும் துறையூர் சிறப்பு முகாம்களில் பல மாதங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் ஓராண்டுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கணிசமானோர் இந்திய வம்சாவளித் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரேயின் அரசு சம்மதம்

மாஸ்கோ, டிச. 20

தன்வசமுள்ள அணு ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வழங்க உக்ரேயின் அரசு சம்மதித்துள்ளது.

உக்ரேயின் தலைநகர் கியூவில் அமெரிக்க, ரஷ்ய மற்றும் உக்ரேயின் பிரதிநிதிகளுக்கிடையே நடைபெற்று வரும் பேச்சுக்களில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. உக்ரேயினுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் அங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (த-5)

## மாகாணசபைகளை பிடிக்க சதிச் செயலில் ஈடுபடும் அரசு

### 'ராவய' ஆசிரியர் பேட்டி

கொழும்பு, டிச. 20

எதிர்க்கட்சிகளின் பிடியில் உள்ள மாகாண சபைகளின் ஆட்சியை கைப்பற்றுவதற்காக அரசு சதிச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

ஐ. தொ. கா. மாகாண சபை உறுப்பினர்கள் பலருக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

மத்திய மாகாணசபை முதலமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிக்க அரசு சகல வழிகளிலும் முயன்று வந்தபோதும் அது கைகூடவில்லை.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் விசேட கோரிக்கைக்கு அமையவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டு வருகிறது என மத்திய மாகாண சபையின் தலைவர் சரத் பூங்கவே அண்மையில் கூறியிருந்த கூற்றை நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்துடன் இணைப்பதன் மூலம் மத்திய மலை நாட்டில் இனத் துவேஷத்தை உருவாக்க ஐ. தே. க. அரசு முயன்று வருகிறது.

மாகாண சபைகளின் ஆட்சியை எதிர்க்கட்சிகளிடமிருந்து கைப்பற்ற அரசு முயன்றாலும் மாகாண சபை விதிகளின்படி ஒரு வருடம் முடியும் முன்னர் மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஜனாதிபதி மாற்ற முடியாது: இந்நிலையில் சதிச் செயல்களினால் அதனைச் சாதிப்பதற்கு அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு திரு. விக்டர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார். (த-5-6)

## அ.தி.மு.கவுடன் மீண்டும் கூட்டு; காங்கிரஸ் கட்சி விவாதிக்கும்!

புதுடில்லி டிச. 20

அ. தி. மு. கவுடன் மீண்டும் கூட்டணி அமைப்பது குறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் வாரத்தில் இந்திரா காங்கிரஸ் விவாதித்து முடிவு எடுக்கும்.

மத்திய மனித வளத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் முன் கண்டவாறு தெரிவித்தார்.

காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி மீண்டும் ஏற்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

எனவே — பெரும்பாலும் அ. தி. மு. க காங்கிரஸ் கூட்டணி மீண்டும் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (த-ள)

# சளைக்காது போராட்டம் நடத்தி பிரிட்டனை படி இறங்க வைத்த ஐரிஷ் குடியரசு இராணுவம்

வட அயர்லாந்துப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சியாக பிரிட்டனும் ஐரிஷ் குடியரசும் கூட்டுப்பிரகடனம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த கூட்டுப்பிரகடனம் கடந்த புதன்கிழமை லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும் (John Major) ஐரிஷ் பிரதமர் அல்பேர்ட் றெனோல்ட்ஸும் (Albert Reynolds) கையெழுத்திட்டுள்ள இப்பிரகடனம், வட அயர்லாந்தில் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முதலாவது நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

பல மாதங்களாக லண்டனிலும் ஐரிஷ் குடியரசின் தலைநகரான டப்ளினிலும் முனைப்பாக நடைபெற்ற அரசியல் பேச்சுக்களின் பலாபலன்களே ஜோன் மேஜரும், அல்பேர்ட் றெனோல்ட்ஸும் செய்துகொண்டுள்ள கூட்டுப் பிரகடனமாகும்.

இந்தக் கூட்டுப்பிரகடனத்தின்படி ஐ. ஆர். ஏ. என அழைக்கப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவம் (Irish Republican Army) வன்முறைகளைக் கைவிடவேண்டும். வன்முறைகளைக் கைவிட்டு மூன்று மாதங்களில் ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான சின் பெய்ன் (Sinn Fein) கட்சியுடன் பிரிட்டன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்.

### ஐக்கிய ராஜ்யம்

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து ஆகியவற்றுடன் வட அயர்லாந்தும் சேர்ந்தே ஐக்கிய ராஜ்யம் (U. K) என்று தற்போது அழைக்கப்படுகிறது.

வட அயர்லாந்தில் உள்ள பெரும்பான்மையினரான புரட்டஸ்தாந்து மக்கள் வட அயர்லாந்து தொடர்ந்து பிரிட்டனின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் சிறுபான்மையினரான கத்தோலிக்கர்கள் அண்டை கத்தோலிக்க நாடான ஐரிஷ் குடியரசுடன் இணைய விரும்புகிறார்கள்.

உலகில் நீண்டகாலமாகப் போரிட்டுவரும் கெரில்லா இயக்கங்களில் ஒன்றான ஐரிஷ் குடியரசு இராணுவம் வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆதிக்கத்தை எதிர்த்து வருகிறது. கத்தோலிக்க மக்களின் ஆதரவுடன் அது இயங்கி வருகிறது. இதன் அரசியல் கட்சிதான் சின் பெய்ன் என்று அழைக்கப்படுகிறது.

### 3000 பேர் இதுவரை பலி

சிறுபான்மை கத்தோலிக்க மக்களுக்கும் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மக்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் மோதல்களே வட அயர்லாந்துப் பிரச்சினை ஆகும். இந்த மோதல்கள் காரணமாக கடந்த 20 ஆண்டுகளில் மூவாயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். அமைதி காக்க வட அயர்லாந்துக்கு அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் படையினரிலும் 300 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

பிரிட்டனினால் பயங்கரவாத இயக்கம் என்று இது வரை அழைக்கப்பட்டு வந்த ஐரிஷ் குடியரசு இராணுவம் வட அயர்லாந்தில் மட்டும் அல்ல பிரதான பூமியான பிரிட்டனிலும் குண்டுத் தாக்குதலை நடத்தி வந்தது அதே சமயம் கத்தோலிக்க— புரட்டஸ்தாந்து மக்களும் மாறி மாறி பழிவாங்கும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஐரிஷ் குடியரசு இராணுவம் சளைக்காது நடத்திய போராட்டத்தின் பலனே கடந்த புதனன்று லண்டனில் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டுப் பிரகடனம் ஆகும்.

வட அயர்லாந்து கத்தோலிக்க— புரட்டஸ்தாந்து மக்கள் தங்கள் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள உள்ள உரிமையை இந்த பிரகடனம் கோடிட்டுக் காட்டுகிறது.

அத்துடன் தனது அரசமைப்பில் வட அயர்லாந்துக்குச் சொந்தம் கொண்டாடும் ஐரிஷ் குடியரசு தற்போதைய கூட்டுப் பிரகடனத்தில் தனது நிலையைச் சிறிது தளர்த்துவதற்கு இணங்கி உள்ளது.

அதாவது வட அயர்லாந்தில் உள்ள பெரும்பான்மை மக்கள் ஏற்றால் அன்றி வட அயர்லாந்து தொடர்பாக எந்த மாற்றத்தையும் செய்யக்கூடாது என்பதற்கு ஐரிஷ் குடியரசு இணங்கி உள்ளது.

### முன்னர் ஒன்றாக இருந்த நாடு

தற்போதைய ஐரிஷ் குடியரசும் வட அயர்லாந்தும் முன்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அயர்லாந்து என்ற பெயருடன் ஒரே நாடாக இருந்தன.

1920ஆம் ஆண்டு அயர்லாந்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இரண்டாக பிரிக்கப்பட்டது.

இரு பகுதிகளுக்கும் தனித் தனி நாடாளுமன்ற மன்றங்களும் அப்போது அமைக்கப்பட்டன.

அயர்லாந்தின் தென்பகுதி பெரும் போராட்டத்துக்கு பின்னர் சுதந்திரம் பெற்று ஐரிஷ் குடியரசு என்ற பெய

### சஞ்சாரன்

ருடன் தற்போது இயங்கி வருகிறது

வடபகுதியே வட அயர்லாந்து என்ற பெயருடன் ஐக்கிய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக தொடர்ந்து பிரிட்டனின் கீழ் இருந்து வருகிறது

ஐரிஷ் குடியரசும் வட அயர்லாந்தும் முன்னைப் போன்று ஒரே நாடாக இணைக்கப்பட வேண்டும் என்று ஐரிஷ் குடியரசு கோரி வருகிறது.

இந்த இணைப்புக்குத் தடையாக இருப்பவர்கள் வட அயர்லாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து மக்களே ஆவர். ஐரிஷ் குடியரசுடன் இணைப்பில் தமது உரிமைகள் பறிக்கப்படும் என்று புரட்டஸ்தாந்து மக்கள் கருதுகின்றனர்.

வட அயர்லாந்தின் 16 லட்சம் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் புரட்டஸ்தாந்து மக்கள் ஆவர்.

வட அயர்லாந்து ஐரிஷ் குடியரசுடன் சமாதான முறையிலேயே மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஐரிஷ் குடியரசு கொண்டிருப்பது, வட அயர்லாந்துப் பிரச்சினையால் பிரிட்டிஷ் — ஐரிஷ் குடியரசு உறவுகளில் நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்த்து வந்திருக்கிறது.

அத்துடன் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஐரிஷ் குடியரசில் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளதுடன் பிரிட்டனின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஐரிஷ் குடியரசு ஆதரவும் அளித்து வருகிறது

ஆகவே தென் ஆபிரிக்க, மத்திய கிழக்குப் பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது வட அயர்லாந்துப் பிரச்சினை தீர்க்க முடியாத சிக்கலான பெரிய பிரச்சினை அல்ல

மத உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினை கடந்த காலங்களில் பிரிட்டனை தொடர்ந்து யுத்த நிலையில் வைத்திருக்கிறது.

இப்பிரச்சினையும் தீர்க்கப்பட்டு விட்டால் பிரிட்டனுக்கு இருந்து வந்த தலைவலி ஒன்று தீர்ந்து விடும்.

''பயங்கரவாதிகள்'' என்று மகுடம் சூட்டி, ஐரிஷ் குடியரசு ராணுவத்தை ஒதுக்கித் தள்ளி வந்த பிரிட்டன், தனது நிலையில் இருந்து இறங்கி, பேச்சு வார்த்தைக்கான கதவைத் திறந்து விட்டிருப்பதற்கு, ஐரிஷ் குடியரசு ராணுவம் சளைக்காது நடத்தி வந்த போராட்டமே காரணம் ஆகும்.

★

### அயர்லாந்தின் வரலாறு

★ இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து சேர்ந்த கூட்டமைப்பே ஐக்கிய ராஜ்யம் (U.K)

★ 1536ஆம் ஆண்டில் இங்கிலாந்தும் வேல்ஸும் இணைக்கப்பட்டன.

★ 1707ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்தும் இணைக்கப்பட்டது.

★ 1800ஆம் ஆண்டில் அயர்லாந்து இணைக்கப்பட்டது.

★ 1920ஆம் ஆண்டு 95சத வீத கத்தோலிக்கர்களைக் கொண்ட அயர்லாந்தின் தென்பகுதி பிரிந்து சென்று தன்னை ஐரிஷ் குடியரசாக பிரகடனம் செய்து கொண்டது. இதன் சனத்தொகை 35லட்சம். தலைநகர் டப்ளின்.

★ [illegible] ஐக்கிய ராஜ்யத்தில் தொடர்ந்து அங்கம் வகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்கள் பரவும் அபாயம்
# தடுப்பு வேலைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், டிச. 20
வெள்ள நிலைமை காரணமாக நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முகம் கொடுக்கும் வகையாக யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்கண்டவாறு தெரிவிக்கும் செய்திக் குறிப்பு ஒன்றை யாழ். மாநகரசபை சுகாதார அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் நேற்று விடுத்தார்.

நோய்த் தடுப்புக்காக கீழ்க் கண்ட நடைமுறைகளைக் கைக்கொள்ளும்படி சுகாதார அதிகாரி கேட்டுள்ளார்.

★ குடி தண்ணீரை கொதிக்க வைத்து ஆறவைத்து அருந்த வேண்டும். குடிதண்ணீர்க் கிணறுகளுக்கு குளோரீன் இடப்பட வேண்டும்.

★ மாநகரசபையால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரை பாவிப்பது சிறந்தது.

★ வெள்ள நீர் கலந்த கிணற்று நீரைப் பாவிக்க கூடாது.

★ மல கூடங்களை பாவிக்கவும். மல கூடம் இல்லாதவர்கள் மேட்டு நிலத்தில் கிடங்கு வெட்டிப் பாவித்தவுடன் மூடிவிடவும்.

★ பாண் தயாரிக்கும் நிலையங்கள் பாணை ஈக்கள் மொய்யாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ அதேபோன்று உணவுச் சாலைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் உணவுகளை ஈக்கள் மொய்க்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ உணவு நிலையங்களில் அமைந்துள்ள குடி தண்ணீர்க் கிணறுகளுக்கு குளோரீன் இடப்பட வேண்டும்.

இந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாநகரசபை ஊழியர்களுக்கு இன்று காலை 8 மணிக்கு பூபாலசிங்கம் மகப்பேற்று நிலையத்தில் கலந்துரையாடல் நடத்தப்படும். இதில் ஆர்வமுள்ள பொதுஸ்தாபனங்கள் கலந்து கொள்ளலாம் என்றும் —

தடுப்பு முறைகள் சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் குளோரீன் இடுதல் போன்ற உதவிகள் தேவைப்படுவோர் தமது பகுதி சுகாதார ஊழியர்களுடன் அல்லது சுகாதார அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சூறாவளி அபாயம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்டது.
இந்த தாழமுக்க மையம் வட மேற்கு திசையில் நகர்வதால் இலங்கையை தாண்டி தமிழ் நாட்டுக் கரையோரத்துக்கு சென்று விடும்.
எனவே சூறாவளி எதுவும் இலங்கையை தாக்கும் சாத்தியம் இல்லை.
எனினும் நாட்டின் வடக்கு, வட கிழக்கு, கிழக்கு கரையோரத்தை அடுத்த கடற் பிரதேசத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும். கடலும் கொந்தளிப்பாக இருக்கும்.
வடக்கு, வட மத்திய, வட மேற்கு மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்தில் வட பகுதியிலும் இடைக்கிடையே மழை பெய்யும். (இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 20 — 04 — 1912
மறைவு: 20 — 11 — 1993

### அமரர் மு.வ. சிவக்கொழுந்து
(இணுவில் கிழக்கு)

கட்டளைக் கலித்துறை
அப்பா எம்மையெலாம் அன்புடன் பெற்றே அறிவுபெறத்
தப்பாது கல்வியுந் தானே பெறச் செய்து தாரணியில்
எப்போதும் உம்மை நினைந்திடவே செய்து விட்டு விட்டு
இப்போது எங்கு சென்றீர் நாங்கள் என்றும் கலங்கிடவே

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சிவபவனம்,
இணுவில் கிழக்கு. (28513)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றொசலின் அன்னபூரணம் திருராஜசிங்கம்

நுணாவிலைச் சேர்ந்த திருமதி றொசலின் அன்னபூரணம் திருராஜசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற J. S. திருராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி செல்வரஞ்சிதராணி, திருமதி இராஜேஸ்வரராணி, திரு. பிறின்ஸ் இராஜேந்திரசிங்கம், திருமதி திவ்வியராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. C. சின்னப்பாபிள்ளை காலஞ்சென்ற T. சந்தரராஜா, திருமதி பாக்கியம், காலஞ்சென்ற S. தர்மசேனன் ஆகியோரின் அருமை மாமியும், காலஞ்சென்ற இராஜரட்ணம், திருமதி நிரஞ்சலம் இராமலிங்கம், திருமதி பாக்கியம் செயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. ரஞ்சித்சிங், Dr. ஷியாமளா, லலித்சிங், விஜிதசிங், மதுமலர், காலஞ்சென்ற அன்ரன் இராஜசெல்வன், றோமேனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குயின்ரன் சாம்சன், யோல் நிரோஷன், மார்கஸ், சுதேஷன், தேவரஞ்சினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று திங்கட்கிழமை (20 - 12 - 1993) பிற்பகல் 3.00 மணிக்கு நுணாவிலில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திவ்வியராணி தர்மசேனன் (மகள்)

நுணாவில். (28516)

### கோவிந்தராஜன் கஸ்தூரி

கோவிந்தராஜன் கஸ்தூரி (கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை 5ம் ஆண்டு மாணவி) 19-12-93 அன்று காலமானார். அன்னார் கோவிந்தராஜன் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வியும் கார்த்திகா, சிந்துபைரவி ஆகியோரின் சகோதரியுமாவார் சமஸ்கிரியைகள் 19-12-93 இல் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்
M. கோவிந்தராஜா (நாதஸ்வரம்)

கெருடாவில்,
தொண்டமனாறு (28515)

## மட்டு நகரில் 30,000 அகதிகள்

கொழும்பு, டிச. 20
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழை காரணமாக 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள அகதிகளுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது என்றும் —

நிவாரணம் வழங்கத் தேவையான நிதியை ஒதுக்கும் படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிறைசேரிக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு அகதிமுகாம்கள் சிலவும் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

வன்னிப் பகுதியிலும் மழை தொடர்ந்து செய்தது (இ-3)

# கிளிநொச்சியிலும் வெள்ளம்
# 10,000 குடும்பங்கள் பாதிப்பு

## குளங்கள் உடைப்பெடுக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம், டிச. 20
கிளிநொச்சியில் 10 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பல வீடுகள் இடிந்து போனதுடன் கால்நடைகளும் இறந்துள்ளன.

மக்களின் உடைமைகள் பெருமளவில் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன.

இரணைமடுக் குளத்தின் நீர்க்கொள்ளளவான 34 அடியையும் மேவி நீர்மட்டம் 35 அடி 9 அங்குலமாக உயர்ந்துள்ளது.

தற்சமயம் செக்கனுக்கு 50 ஆயிரம் கன அடி நீர் இரணைமடுக் குளத்தில் இருந்து வெளியேற்றப்படுகிறது.

குளத்தின் வலது கரை உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளதால் ஆட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, மாங்குளம் பகுதிகளில் உள்ள சிறுகுளங்கள் உடைப்பெடுக்குமானால் இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் சடுதியாக உயர்ந்து உடைப்பெடுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என அறிவிக்கப்படுகிறது.

முல்லை மாவட்டத்தில் உடையார்கட்டுக் குளம், தண்ணிமுறிப்புக்குளமும், முறிப்புக்குளமும், முத்தையன்கட்டுக்குளமும் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன.

மேலும் 50க்கு மேற்பட்ட சிறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. முத்தையன்கட்டு குளத்துக்கு மண்மூடைகள் அடுக்கும் பணியில் 500க்கு மேற்பட்ட மக்களும், பொறியியலாளர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்புப் பணியிலும், உதவிப்பணியிலும் விடுதலைப் புலிகளின் விசேட மீட்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ-3)

## யாழ். மாவட்டத்தில் ஜனவரியில் இருந்து
# 14 பிரதேச செயலகங்களும் முழுமையாக இயங்க உள்ளன

யாழ்ப்பாணம், டிச. 20
யாழ். மாவட்டத்தில் 14 பிரிவுக் கச்சேரிகள் — பிரதேச செயலகங்கள் — ஜனவரி முதல் முழுமையாக இயங்கவிருக்கின்றன.

ஒரு வருடத்துக்கு முன் இந்த பிரதேச செயலகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் அவை முழுமையாக செயற்படவில்லை.

அடுத்த மாதம் முதல் இந்த செயலகங்கள் முழுமையாக செயல்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த செயலகங்களுக்கான நிதி முழுமையாக அடுத்த மாதம் முதல் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் அனுப்பப்படும்.

யாழ். செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் 40 பேர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிற்றூழியர் தரத்தில் உள்ள 31 பேரும் இந்த பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. க. வைத்திலிங்கம் இந்த இடமாற்றங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியலை கடந்த வெள்ளி வெளியிட்டார்.

கூட்டுறவு, கல்வி, சமூக சேவைப் பகுதி, கணக்கு வேலைகள் உட்பட மற்றும் முக்கிய இணைக்கள வேலைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. (த-3-162)

## நாளை

யாழ். தோட்டரக் கழகம் ஏற்பாடு செய்துள்ள புகைப்படக் கண்காட்சி ஒன்று நாளையும், நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். (த)

★ ★ ★

தொலைக்கல்வி கற்பிக்கும் சகல சிரேஷ்ட போதனாசிரியர்களையும் நாளை செவ்வாய் காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒன்றுகூடுமாறு தொலைக்கல்வி இணைப்பாளர் திரு துரை தியாகராஜா கேட்டுள்ளார். (த)

## குடாநாட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் மழை பெய்ததால் மார்கழிக் குளிர் ஆரம்பமாகியது நேற்றைய தினமும் குடாநாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. போக்குவரத்தும் மந்தமாகவே இருந்தது.

இதேவேளை வெள்ளி— சனிக்கிழமைகளில் பெய்த மழையினால் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகள், ஆலயங்கள், பொது மண்டபங்களில் தங்கிய மக்களுக்கு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சமைத்த உணவு வகைகளை நேற்று வழங்கின.

தொண்டர் நிறுவனங்கள் உதவி

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நேற்று முன்தினம் நண்பகல் சமைத்த உணவை வழங்கியது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு அம்புலன்ஸ் வண்டியில் சென்று மருத்துவ வசதிகளைச் செய்து வருகின்றனர்.

இதேவேளை, வெள்ள அகதிகளுக்கு உதவுவது குறித்து அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்று கூடி ஆராயவுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக மிதவைகளை அமைத்துத் தமது வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பொருட்களை மீட்டு வந்ததை நேற்றுக் காலை காணமுடிந்தது. பலரும் முறிந்து விழுந்த வாழைகளின் தண்டுகளை இணைத்து மிதவைகளாகப் பயன்படுத்தினர்.

நேற்று முன்தினம் பின்னர் பெய்த மழையினால் பல இடங்களில் உள்ள வாய்க்கால்கள், ஆறு பெருக்கெடுத்து ஓடுவதுபோல இரைச்சலுடன் பாய்ந்தன.

வழுக்கியாறு நேற்றும் தொடர்ந்து நீர்மேவிப் பாய்ந்தது. வயற்பகுதிகளில் மேலும் வெள்ளம் தேங்கியது. (அ-15 162-8-28-இ)

# ராணுவ ரீதியில் தோல்வி கண்ட சிசிலுக்கு ராஜதந்திரி பதவியா?

## 'ஐலண்ட்' நாளிதழ் கேள்வி

கொழும்பு, டிச. 20
சிசிலின் தலைமையில் இலங்கை இராணுவம் வரலாறு காணாத தோல்விகளை சந்தித்து வந்துள்ளது என்பது தெரிந்த விஷயமாகும். அப்படிப்பட்ட ஒருவருக்கு அவர் பதவி விலகிய பின் ராஜதந்திரி பதவி வழங்க அரசு முன்வந்த செயல் குழப்பத்தைத் தருகின்றது.

ஓய்வுபெறும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவுக்கு ராஜதந்திர பதவி வழங்க அரசு முன்வந்துள்ளது குறித்த 'த ஐலண்ட்' இவ்வாறு தெரிவித்துள்ளது.

''பூநகரி பேரழி''வின் பின்னர் தோல்வியடையும் இராணுவத்துக்குத் தாம் தொடர்ந்து தலைமை வகிக்க விரும்பவில்லை என்று சிசில் வைத்தியரத்னா கூறியிருந்தார். தமது சொந்த இராணுவத்தையே அவர் இப்படி கூறியிருந்தார்.

பின்னர் அப்படித்தான் கூறவில்லை என்று சிசில் வைத்தியரத்னா மறுத்திருக்கிறார்.

''நாட்டின் நலன்களை உண்மையில் பேணுவதாக இந்த அரசாங்கம் கூறிக்கொள்வதானால் ஓய்வுபெறும் படைத் தளபதிகளையும் உயர் அரச அதிகாரிகளையும் வேறு பதவிகளைக் கொடுத்து தம்முடன் வைத்துக் கொள்ளும் போக்கை தொடருவது குறித்து சிந்திக்க வேண்டும்'' —

இவ்வாறு ஐலண்ட் நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் கேட்டுள்ளது. (த-எ)

## பேச்சு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப் பாதிக்கப்பட்டுள்ளது. வன்செயல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் அங்குள்ள இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். அமைச்சர் தொண்டமானுக்கு மட்டுமல்ல அங்குள்ள அனைவருக்குமே இது தெளிவாகத் தெரியும்.

அன்றும் இன்றும் நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மலையகத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதற்கு அமைச்சர் தொண்டமானுக்குப் பூரண உரிமை உண்டு.

வடக்குப் போன்று மலையகத்தில் யுத்த நிலை ஏற்படாமல் பாதுகாப்பளிக்க கூடாது. எனவே அமைச்சர் தொண்டமானுடன் கலந்து பேசுவது அவசியமாகும்.

மலையக குடிமக்களுடன் இணைந்து எதிர்காலத்தை நோக்கிச் செல்வதற்கு ஏற்றவர் நான்தான் என்று தொண்டமான் கருதக் கூடும்.

என்னை அரசுடன் இணையுமாறு கோருவதற்கு அவருக்கு உரிமையோ, பொறுப்போ இல்லை.

வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை என ஜனாதிபதி கூறுகிறார் அப்படியானால் சபலைட் குப் பிகளை கழுத்தில் கட்டியவாறு தங்கள் முழு வாழ்வையும் துறந்து அங்கே யுத்தத்தில் ஈடுபட்டிருப்போர் யார்? ஏன் அவர்கள் போரிடுகின்றனர்? நாம் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் — என்றார். (இ-5-6)

## அசுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும்.

இது போன்ற அற்ப ஆசைகளுக்காக எமது மக்களையும், தேசத்தையும் காட்டிக் கொடுத்து தேசத்துரோக குற்றமிழைத்த ஒன்பது பேர் எம்மால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான தொடர் விசாரணையின் போது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதன் பேரில் இவர்கள் ஒன்பது பேருக்கும் அதிஉயர் தண்டனையான மரண தண்டனை வழங்கப்படுகிறது.

இவர்கள் போன்று எம் மத்தியில் செயற்படுபவர்களை இனம் காணும் வகையில் உங்கள் வதிவிடங்களுக்கு அருகாமையில் அல்லது நீங்கள் சென்று வரும் இடங்களில் சந்தேகம் ஏற்படும் வண்ணம் நடமாடுவோர் பற்றி நேரடியாகவோ அல்லது வேறு வழிகளிலோ அறியும் விவரங்களை உடனடியாக அருகில் உள்ள இயக்க முகாம்களிலோ அல்லது கடித மூலமாகவோ தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்த தேச விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை நாம் கைது செய்து விசாரணை செய்யும் சமயத்தில், அவர்களின் மனைவி, பிள்ளைகள் எழுதும் கடிதங்களை பார்க்கும்போது குடும்ப நிலைகளை உணர முடிகிறது. தமது குடும்பத்தைக் கூட நினைக்காத அவர்கள், தியாகிகள் மூலம் கட்டி எழுப்பப்படும் தேசத்துக்கு கேடு விளைவிப்பது மட்டுமல்லாமல் தியாகங்களையும் அர்த்தமில்லாதவை ஆக்குகிறார்கள். இந் நிலையில் தான் நாம் இந்த முடிவை எடுக்க வேண்டியுள்ளது— என்று கூறினார். (த-3)

# யுத்தத்துக்கு முடிவு காணும் திறமை காமினிக்கே உண்டு

## லக்ஷ்மன் செனவிரத்தினா

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக் கூடிய திறமை காமினி திஸநாயக்காவுக்கே உண்டு.

அவ்வாறு கூறினார் சபையில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்தினா வெலிமடையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியபோது மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத் தலைவர்களை தங்கள் இலக்குகளாக வைத்திருக்கவில்லை. நிச்சயமாக விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்கு காமினி திஸநாயக்கா தான். தங்களுக்கு சமமாகப் போராடுபவர் காமினி என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே காமினியை முன்னுக்கு வைத்து இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

இன்று 22 லட்சம் இளைஞர்கள் வேலை இன்றி உள்ளனர். வடக்கு-கிழக்கு யுத்தத்துக்காக ஒவ்வொரு மணித்தியாலமும் 40 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் ஆயிரம் பேர் இறக்கின்றனர்.

வெளிநாட்டுப் படையின் உதவியுடன் எதிரிகளை வெல்லக்கூடிய அரசாங்கம் ஒன்று எமக்கு வேண்டும். எதிரியை வெல்வதற்காகப் பிசாசுடனும் கூட்டு வைக்கலாம் என்று கூறும் பழமொழி ஒன்று உண்டு.

எம்முடன் சேர தொண்டமான் விரும்பினால் அவரை நாம் வரவேற்போம். அவரை சேர்ப்பதன் மூலம் எமது கட்சியின் தனித்தன்மை கெட்டுவிடாது

— இப்படி அவர் தெரிவித்தார். (த-எ)

## ஆங்கில ஆசிரியர்கள்
# பயிற்சி நெறி விவகாரம் வட.-கிழக்கு ஆளுநரிடம்

யாழ்ப்பாணம் டிச. 20
யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்துவது குறித்த விவகாரம் தற்சமயம் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் பயிற்சிக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான பயிற்சியை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபர் கல்வி மற்றும் திட்டமிடல் அமைச்சு அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

இதற்கு அவர்கள் சம்மதம் அளித்தபோதும், இவ்விவகாரத்தில் ஏற்பட்ட சில பூர்வாங்க ஏற்பாட்டில் இழுபறி நிலவியதால் இவ்விடயம் ஆளுநரின் முடிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் — அரச அதிபர் தெரிவித்தார். (த-3)

## நன்றி நவிலல்

கடந்த 13-11-93இல் சிவபதம் அடைந்த வடகோவை ஆசிரியர் சி.க. சுப்பிரமணியம் அவர்களின் அந்தியக் கிரியைகளின் போது சமுகந்தந்தும், பட்டாடை, பூமாலை, மலர்வளையம் என்பன சாத்தியும், அஞ்சலி புரை நிகழ்த்தியும் பங்குபற்றிய அன்பர்களுக்கும் பின்பு, சபிண்டீகரண நாளில் பங்குபற்றிய குருமார்களுக்கும், செய்தித் தாளில் அஞ்சலியுரைத்த அரசாங்க அதிபர் முதலான பேரன்பர்களுக்கும் சங்கங்கள் சபைகளுக்கும் நினைவு மஞ்சரியைத் தங்கள் அனுதாப உரைகளால் சிறப்பித்த அன்பர்களுக்கும், அதனைத் தொகுத்துப் பதிப்பித்த ஆசிரிய மணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் இந்நினைவு மஞ்சரியைச் சிறப்பாகப் பதிப்பித்துதவிய இணுவில் அம்மா அச்சகத்தினருக்கும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர் ஆகிய அனைவருக்கும் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

சு. மகேஸ்வரி (மனைவி)
சு. மங்கையர்க்கரசி (மகள்)

கந்தசுவாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (28514)

## காணாமற்போன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட படையினரின் எண்ணிக்கையை ஸ்ரீலங்கா அரசு இன்னும் உறுதிப்பட வெளியிடவில்லை என்று—

அந்த கொல்லப்பட்ட படையினரில் 200 பேர் அ... இருக்க... ப்பிடப்பட்டபோதும். கொல்லப்பட்ட பெரும்பாலான படையினரின் பெயர் விவரங்கள் பட்டியல் இல்லாததால் அஸ் ... ப்படைப்பது என்பது ... ஸ்ரீலங்கா அரசு உள்ளதாகவும்— ... தெரிவித்தது (இ-3-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 303/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org